# பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) விதிகள், 1995

## (திருத்தச் சட்டத்துக்கான விதிகள் –2016)

## பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) திருத்தச் சட்டம் விதிகள், 2018

பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989. (33/1989) பிரிவு 23ன் கீழ் உட்பிரவு (1)ல் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு மத்திய அரசு கீழ்காணும் விதிகளை உருவாக்கியுள்ளது. அவை பின்வருமாறு:

**1. குறுந்தலைப்பு மற்றும் தொடக்கம்**

(1) இவ்விதிகளை பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) விதிகள், 1995 என்று அழைக்கலாம்.

(2) அதிகாரப்பூர்வ அரசிதழில் வெளியிடப்படும் தேதியன்று நடைமுறைக்கு வரும்.

**2. வரையறைகள்**

இவ்விதிகளில், உரிய சூழல் வேறுவிதமாக பொருள் கொள்ள வேண்டிய தேவையில்லாதபோது,

(a) ‘‘சட்டம்’’ என்பது பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம், 1989 (33/1989) என்று பொருள்படும்.

(b) ‘‘சார்ந்திருப்பவர்கள்’’ என்பதற்கு, பாதிக்கப்பட்டவரை அவரது ஆதரவுக்காகவும், பராமரிப்புக்காகவும் முழுமையாக அல்லது பிரதானமாக சார்ந்திருக்கிற வாழ்க்கை துணை, குழந்தைகள், பெற்றோர், சகோதரர், சகோதரி என்று பொருள்படும்.

(c) ‘‘அடையாளம் காணப்பட்ட பகுதி’’ என்பது எந்தப் பகுதிகளிலெல்லாம் வன்கொடுமை நிகழக்கூடும் என்று மாநில அரசு நம்புவதற்கு காரணமுள்ளதோ அல்லது எங்கெல்லாம் மீண்டும் வன்கொடுமைகள் நடக்கலாம் என்று மாநில அரசு கருதுகின்றதோ அந்தப் பகுதிகளிலெல்லாம் அடையாளம் காணப்பட்ட பகுதியாகும்.

(d) ‘‘அரசுசாரா அமைப்பு’’ என்து (21/1860) ஆண்டு சங்கங்களின் பதிவு சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு பட்டியல் சாதியினர் மற்றும பட்டியல் பழங்குடியினரின் நலவாழ்வு செயல்பாடுகளில்

ஈடுபட்டுள்ள தொண்டு நிறுவனங்கள் அல்லது ஆவணங்கள் பதிவு தொடர்பான வேறு சட்டங்களின் கீழோ அல்லது வேறு வகையிலோ இயங்கும் தன்னார்வ அமைப்பைக் குறிப்பதாகும்.

(e) ‘‘அட்டவணை’’ என்பது இந்த விதிமுறைகளில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணை என்று பொருள்படும்

(f) ‘‘பிரிவு’’ என்பது சட்டத்தின் பிரிவு என்று பொருள்படும்.

(g) ‘‘மாநில அரசு’’ என்பது யூனியன் பிரதேசங்களைப் பொறுத்த வரையில், அதை நிர்வகிப்பதற்காக அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 239–ன் கீழ் குடியரசு தலைவர் நியமனம் செய்த நிர்வாகி என்று பொருள்படும்.

(ga) “தானாக முன்வந்து” என்பதற்கு இந்திய தண்டனைச் சட்டம் (45/1860) பிரிவு 39ல் கொடுக்கப்பட்டுள்ள அதே பொருள்படும்.

(h) இந்த விதிகளில் பயன்படுத்தப்பட்ட சில சொற்களும் தொடர்களும் இங்கு விளக்கப்படவில்லை என்றாலும் வன்கொடுமை சட்டத்தில் என்ன பொருளில் கையாளப்பட்டதோ அதுவே இங்கும் பொருந்தும்.

**3. முன்னெச்சரிக்கை மற்றும் முன் தடுப்பு நடவடிக்கைகள்.–**

(1) பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மீதான வன்கொடுமைகளை தடுக்கும் நோக்கில் மாநில அரசு கீழ்கண்டவற்றை பின்பற்ற வேண்டும்:–

(i) வன்கொடுமைக் குற்றங்கள் நிகழக்கூடும் என சந்தேகிக்கும இடங்களையும் அல்லது இந்த சட்டத்தின்படியான வன்கொடுமைகள் மீண்டும் நிகழும் என சந்தேகிக்கப்படும் இடங்களையும் அடையாளம் காணுதல்.

(ii) ஆடையாளம் காணப்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கு நிலையை ஆராய மாவட்ட குற்றவியல் நடுவர் அல்லது காவல்துறை கண்காணிப்பாளர் அல்லது வேறு அலுவலர்களை அந்த பகுதிக்கு சென்று பார்வையிட ஆணையிடுதல்.

(iii) அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் தேவை என்று கருதினால் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் அல்லாதவர்கள் அவர்களின் உறவினர்கள், வேலையாட்கள் அல்லது பணியாட்கள் மற்றும் குடும்ப நண்பர்கள் வைத்திருக்கும் துப்பாக்கி உரிமங்களை தற்காலிகமாக நிறுத்திவைப்பது அத்தகைய ஆயுதங்களைப் பெற்று அரசின் ஆயுதக் கிடங்கில் ஒப்படைத்தல்.

(iv) சட்டத்துக்கு முரணான சுடுகருவிகள் அனைத்தையும் பறிமுதல் செய்தல், சட்டத்துக்கு முரணாக அவை உற்பத்தி செய்யப்படுதலையும் தடை செய்தல்.

(v) பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் உரிமைக்கும் உடைமைக்கும் பாதுகாப்பை அளிக்க அவசியம் ஏற்பட்டால் அவர்களுக்கு ஆயுதம் வைத்துக்கொள்ளும் உரிமைகளை வழங்குவது.

(vi) இச்சட்டத்தின் விதிகளை நடைமுறைப்படுத்த அரசுக்கு உதவிட அவசியம் என்று கருதினால் மாநில அளவில் உயர்மட்டக் குழு, மாவட்ட மற்றும் கோட்ட அளவிலான குழுக்கள் அல்லது இதுபோன்ற பல குழுக்களை அமைத்தல்.

(vii) இச்சட்டத்தின் விதிமுறைகளை திறம்பட அமலாக்கம் செய்வதற்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்க விழிகண் மற்றும் கண்காணிப்பு குழுக்களையும் அமைத்தல்.

(viii) பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடி மக்களுக்கு மத்திய மாநில அரசுகளின் சட்டம், விதிகள், நடைமுறைகள், மற்றும் திட்டங்கள் மூலம் அவர்களுக்கான உரிமைகள் மற்றும் திட்டங்கள் மூலம் அவர்களுக்கான உரிமைகள் மற்றும் பாதுகாப்பு குறித்து விளக்குவதற்காக அடையாளம் காணப்பட்ட பகுதிகளில், விழிப்புணர்வு மையங்களை அமைத்தல் மற்றும் பயிற்சிப் பட்டறைகளை நடத்துதல்.

(ix) விழிப்புணர்வு மையங்களை அமைத்தும், நிர்வகித்தும், பயிற்சி பட்டறைகளை நடத்திவரும் அரசு சாரா அமைப்புகளுக்கு தேவையான நிதி மற்றும், இதர உதவிகளை அளித்து ஊக்குவித்தல்.

(x) அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் சிறப்பு காவல்படையை அமைத்தல்.

(xi) ஒவ்வொரு காலாண்டு இறுதியின்போது சட்டம் – ஒழுங்கு, பல்வேறு குழுக்களின் நடவடிக்கைகள், இச்சட்டத்தின் விதிகளை அமலாக்குவதற்கு பொறுப்புள்ள சிறப்பு அரசு குற்றவியல் வழக்குரைஞர், புலனாய்வு அதிகாரிகள் ஆகியோரின் நடவடிக்கைகளை இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் ஆகியவற்றை மறு பரிசீலமை செய்தல்.

## 4. அரசுத் தரப்பை மேற்பார்வை செய்து அறிக்கை சமர்ப்பித்தல்

(1) மாவட்ட நிர்வாக நடுவர் அளிக்கும் பரிந்துரையின் அடிப்படையில் மாநில அரசு ஒவ்வொரு மாவட்டத்துக்கும் உயர் மட்ட வழக்கறிஞர்களைக் கொண்ட குழுவை அமைக்கும். சிறப்பு நீதிமன்றங்களில் இந்த வழக்குகளை நடத்துவதற்கு அவர்கள் 7 ஆண்டுகள் அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(1A) மாநில அரசு இந்த வழக்குக்கு பொறுப்புள்ள விசாரணை இயக்குநரோடு அல்லது அரசுத் தரப்பு குற்றவியல் வழக்கறிஞர்களுக்கு பொறுப்பானவருடன் கலந்து ஆலோசித்து வன்கொடுமை வழக்குகளை சிறப்பு நீதிமன்றங்கள் மற்றும் தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றங்களிலும் நடத்துவதற்கு சிறப்பு அரசு குற்றத்துறை வழக்கறிஞர்கள் மற்றும் தனிப்பட்ட அரசு குற்றத்துறை வழக்கறிஞர்களின் எண்ணிக்கையைக் குறிப்பிட வேண்டும்.

(1B) துணை விதி (1) மற்றும் துணைவிதி (1A) ஆகியவற்றில் சொல்லப்பட்டுள்ளபடி அமைக்கப்படும் வழக்கறிஞர்கள் குழுக்களில் இடம் பெற்றிருப்பவர்களை மாநில அரசு அறிவிப்பு செய்து தனது அரசிதழில் வெளியிட வேண்டும். இக்குழுக்கள் 3 ஆண்டுகளுக்கு இப்பொறுப்பை கவனிக்கும்.

(2) மாவட்ட நிர்வாக நடுவர் மற்றும் குற்றவழக்கு தொடர்புத்துறை இயக்குநர் ஆகியோர் வருடத்துக்கு இரண்டு முறை அதாவது ஜனவரி, ஜூலை மாதங்களில் அரசு குற்றவியல் வழக்குரைஞர்களின் செயல்பாடுகள் குறித்து ஆய்வு செய்து அது குறித்த அறிக்கையை மாநில அரசுக்கு அனுப்ப வேண்டும்.

(3) இவ்வழக்கை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட அரசு குற்றவியல் சிறப்பு வழக்குரைஞர், தன் திறனுக்கு ஏற்ப வழக்கை நடத்தாமலோ இது குறித்து மாநில அரசுக்கு தெரியவந்தால் அல்லது அரசு அவ்வாறு கருதினால் அவரது பெயர் குழு பட்டியலில் இருந்து நீக்கப்படும்.

(4) மாவட்ட நிர்வாக நடுவர் மற்றும் மாவட்ட அளவில் இவ்வழக்குக்கு பொறுப்பு வகிக்கும் அதிகாரி ஆகியோர் கீழ் வருவனவற்றை ஆய்வு செய்வார்கள்.–

(a) இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் தற்போதைய நிலை குறித்தும்,

(b) இச்சட்டத்தின் அத்தியாயம் IV-இல் குறிப்பிட்டுள்ளவாறு பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் நடைமுறையாக்கம் பெற்றிருக்கிறதா

என்பது குறித்தும் ஆய்வு செய்து ஒவ்வொரு மாதமும் 20ஆம் தேதி அன்றோ அல்லது அதற்கு முன்போ மாநில அரசுக்கும் விசாரணை இயக்குநருக்கும் அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்க வேண்டும். ஒவ்வொரு வழக்கிலும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அந்த அறிக்கையில் குறிப்பிட வேண்டும்.

(5) மேற்சொன்ன விதிகளின் உள்விதி (1)ல் சொல்லப்பட்டவைகளை கடந்து, வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர் விரும்பினால் அல்லது அவசியம் என்று கருதினால் வன்கொடுமை வழக்குகளை விசாரிக்க திறமையான மூத்த வழக்குரைஞர்களை சிறப்பு நீதிமன்றங்களிலும், பிரத்யேக சிறப்பு நீதிமன்றங்களிலும் மாவட்ட நிர்வாக நடுவர் அமர்த்திக் கொள்ளலாம். அந்த வழக்கறிஞர் சரி என்று கருதும் அவருக்கான கட்டணத்தை அரசே செலுத்த வேண்டும்.

(6) அரசு குற்றவியல் சிறப்பு வழக்குரைஞர்களுக்கான கட்டணத்தை மாநில அரசே நிர்ணயம் செய்யும், மாநிலத்தின் இதர குழுக்களில் உள்ள வழக்குரைஞர்களின் கட்டணத்தை விட இது கூடுதலாக இருக்கும்.

## 5. காவல்நிலைய பொறுப்பு அதிகாரிக்கு தகவல்

(1) இச்சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள வன்கொடுமை குற்றம் தொடர்பாக வருகின்ற ஒவ்வொரு தகவலையும், அது வாய்மொழியாக தரப்பட்டால், காவல் நிலைய பொறுப்பு அதிகாரி அந்தத் தகவலைப் பெற்று உடனடியாக புகாராக எழுத வேண்டும் அல்லது அவரது ஆணையின் அடிப்படையல் மற்றவர் இப்புகாரை எழுதி புகார் கொடுத்தவரிடம் படித்துக்காண்பித்து கையெழுத்து வாங்க வேண்டும். ஒருவேளை எழுத்துப்பூர்வமான தகவலாக இருந்தால் அதில் அவருடைய கையெழுத்தை பெற வேண்டும். காவல் நிலையத்தில் உள்ள அதற்குரிய புத்தகத்தில் இந்தப் புகாரை பதிவு செய்ய வேண்டும்.

(2) துணைவிதி (1)ன் படி பதிவு செய்யப்பட்ட தகவலின் பிரதி ஒன்றை புகார் கொடுத்தவரிடம் இலவசமாகக் கொடுக்க வேண்டும்.

(3) சம்பந்தப்பட்ட காவல் நிலைய அதிகாரி துணை விதி (1)ல் சொல்லப்பட்டபடி செய்ய மறுக்கும்போது, பாதிக்கப்பட்ட நபர் அந்த தகவல் பற்றிய விவரத்தை எழுதி பதிவுத் தபாலில் காவல்துறை கண்காணிப்பாளருக்கு அனுப்ப வேண்டும். அவர் நேரிடையாகவோ அல்லது காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத ஒருவர் வழியாகவோ இந்தப் புகாரை விசாரித்து சம்பந்தப்பட்ட காவல்நிலைய அதிகாரியை காவல் நிலைய புத்தகத்தில் புகாரை பதிவு செய்ய எழுத்து மூலம் ஆணை பிறப்பிக்கலாம்.

6. **அதிகாரிகளின் கள ஆய்வு**

(1) மாவட்ட நிர்வாக நடுவர் அல்லது துணைக்கோட்ட நிர்வாக நடுவர் அல்லது பிற ஆட்சித்துறை குற்றவியல் நடுவர் அல்லது பிற ஆட்சித்துறை குற்றவியல் நடுவர் அல்லது காவல்துறை கண்காணிப்பாளர் பதவிக்குக் குறையாத ஒருவர், ஆகியோரின் எல்லைக்குட்பட்ட பகுதியில் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மீது வன்கொடுமை நடந்தால் அது பற்றி புகார் கூறினாலோ அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரியின் கவனத்துக்கு தெரிய வந்தாலோ வன்கொடுமை நடந்த பகுதியை அவர் உடனடியாக நேரில் பார்வையிட்டு கலவரத்தின் பாதிப்பு உயிர் இழந்தவர்களின் விவரம், சொத்துக்களுக்கு ஏற்பட்ட சேதம் குறித்து அரசுக்கு அறிக்கை தர வேண்டும்.

(2) வன்கொடுமை நடந்த பகுதியை பார்வையிடும் மாவட்ட நிர்வாக நடுவர் அல்லது உட்கோட்ட நிர்வாக நடுவர் அல்லது பிற ஆட்சித்துறை குற்றவியல் காவல்துறை கண்காணிப்பாளர், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர் அரசுக்கு கீழ்கண்ட விவரங்களை உடனடியாக தெரிவிக்க வேண்டும்.

- (i) வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோர், நிவாரண உதவி பெறத் தகுதியுள்ள குடும்ப உறுப்பினர்கள் மற்றும் சார்ந்திருப்பவர் பற்றிய பட்டியல்.
- (ii) வன்கொடுமை பரவியுள்ள பகுதியில் உயிரிழந்தவர்களின் சொத்துக்களுக்கு ஏற்பட்டுள்ள சேதம் பற்றிய விவரம் குறித்த விரிவான அறிக்கை.
- (iii) வன்கொடுமை பரவியுள்ள பகுதிகளில் தீவிர காவல் சோதனைக்கு ஆணையிடல்.
- (iv) உயிரிழந்தவர்களின் ஆதரவாளர்கள் மற்றும் சாட்சிகளுக்கு போதிய பாதுகாப்பு அளிப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய விவரம்.
- (v) பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரண உதவி அளித்தல்.

**7. புலனாய்வு அதிகாரி**

(1) வன்கொடுமை சட்டத்தின் கீழ் நடந்துள்ள ஒரு குற்றத்தை காவல்துறை கண்காணிப்பாளர் பதவிக்கு குறையாத ஒருவரைக் கொண்டு புலனாய்வு செய்ய வேண்டும். இவரின் கடந்த கால அனுபவம், பணியில் அவருக்குள்ள கடமை உணர்வு ஆகியவந்றைக் கருத்தில் கொண்டு இந்த புலனாய்வு அதிகாரி மாநில அரசு, காவல்துறை தலைமை இயக்குநர், காவல்துறை கண்காணிப்பாளர் மூலம் நியமனம் செய்யப்படுவார். குறுகிய காலத்துக்குள் அவர் விசாரணையை சரியான வழியில் மேற்கொள்வார்.

(2) நியமனம் செய்யப்படும் புலனாய்வு அதிகாரி உட்பிரிவு **(1)**ன் படி **60** நாட்களுக்குள் தன் புலனாய்வை முடித்து அறிக்கையை கண்காணிப்பாளருக்கு அளிக்க வேண்டும், அவர் அந்த அறிக்கையை மாநில காவல்துறை இயக்குநருக்கு அனுப்பி வைப்பார்.

(2A) மேற்சொன்ன உட்பிரிவு **(2)**ன் படி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து **60** நாட்களுக்கு மேல் காலதாமதமானால், புலன் விசாரணை அதிகாரி அதற்குரிய காரணத்தை எழுத்துப்பூர்வமாக தாக்கல் செய்ய வேண்டும்.

(3) புலனாய்வு அதிகாரி மேற்கொண்டுள்ள அனைத்து புலனாய்வு நடவடிக்கைகள் குறித்தும் ஒவ்வொரு காலாண்டு இறுதியின்போது மாநில உள்துறைச் செயலர், சமூக நலத்துறைச் செயலர், குற்றவழக்கு தொடர்புத்துறை இயக்குநர், குற்றவழக்கு தொடர்புத்துறை பொறுப்பு அதிகாரி பரிசீலனை செய்ய வேண்டும்.

**8. பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் பாதுகாப்பு கலம் அமைத்தல்**

(1) காவல்துறை இயக்குநர்/ காவல்துறை தலைவர் பொறுப்பில் மாநில அரசு, பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் பாதுகாப்பு கலத்தை மாநில காவல்துறை தலைமையகத்தில் அமைக்க வேண்டும். இக்கலம் கீழ்கண்ட பணிகளுக்கு பொறுப்பேற்கும்.

- (i) கலவரம் ஏற்படக்கூடும் என அடையாளம் காணப்பட்ட பகுதியில் ஆய்வு நடத்துதல்.
- (ii) அடையாளம் காணப்பட்ட பகுதியில் பொது அமைதியை நிலை நாட்டுதல்.
- (iii) அடையாளம் காணப்பட்ட பகுதியில் சிறப்பு காவல்படையை நிறுத்த அல்லது சிறப்பு காவல் சாவடியை அமைக்க அரசுக்குப் பரிந்துரை செய்தல்.

(iv) வன்கொடுமை நிகழ்ந்ததற்கான சரியான காரணம் குறித்து புலனாய்வு செய்தல்.

(v) பட்டியல் சாதிகள் மற்றும் பழங்குடி மக்களுக்குப் பாதுகாப்பு உணர்வை ஏற்படுத்துதல்.

(vi) அடையாளம் காணப்பட்ட பகுதியில் சட்டம் ஒழுங்கு குறித்து தலைமை அதிகாரி அல்லது சிறப்பு அதிகாரிக்கு தகவல் தருதல்.

(via) இச்சட்டத்தின் பகுதி IVa–ல் சொல்லப்பட்டவாறு பாதிக்கப்பட்டவர் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் தொடர்பான அனைத்தும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதா என்ற விவரங்களை பொறுப்புடைய அதிகாரிக்கும், மாவட்ட ஆட்சியருக்கும் தெரிவிக்க வேண்டும்.

(vii) பல்வேறு அதிகாரிகளை புலனாய்வைப் பற்றி விசாரிக்கவும், வன்கொடுமை நடந்த இடத்தைப் பார்வையிடவும் செய்தல்.

(viii) சட்ட விதி **5** துணைவிதி **(3)**ன் கீழ்காவல் நிலையத்தில் உள்ள குறிப்பேட்டில் குற்றம் குறித்து காவல்நிலைய அதிகாரி பதிவு செய்ய மறுத்தால், இந்த வழக்கு குறித்து காவல்துறை காவல்கண்காணிப்பாளர் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து காவல்துறை கண்காணிப்பாளர் எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து விசாரணை செய்வார்.

(ix) அரசு ஊழியர் ஒருவர் இவ்வழக்கு குறித்து அலட்சியமாக இருந்தால் அது பற்றிய விசாரணை .

(x) இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலவரம் பற்றிய மறுபரிசீலனை.

(xi) வழக்கு குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், எடுக்கப்படவுள்ள நடவடிக்கைகள் குறித்த விவரத்தினை ஒவ்வொரு மாதமும் **20**ஆம் தேதி அன்றோ அல்லது அதற்கு முன்போ மாநில அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தல்.

**9. உயர் அதிகாரி/ தலைமை அதிகாரி நியமனம்**

(1) இச்சட்டத்தின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்தும் பொறுப்பில் உள்ள மாவட்ட நிர்வாக நடுவர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் அல்லது புலனாய்வு அதிகாரிகள் மற்றும் இதர அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து செயல்படுவதற்காக மாநில அரசின் செயலர் பதவிக்கு இணையான உயர் அதிகாரிகளை மாநில அரசு நியமிக்க வேண்டும். அவர் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினராக இருத்தல் அவசியம். ஒவ்வொரு காலாண்டு இறுதியின் போதும் அவர் கீழ்காணும் விவரங்கள் குறித்து மதிப்பாய்வு செய்ய வேண்டும்.

(i) விதி 8ன் பிரிவு (ix) விதி 6, விதி 4 (2)& (4)−ன் கீழ் மாநில அரசு பெறும் அறிக்கைகள்

(ii) இச்சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை

(iii) அடையாளம் காணப்பட்ட பகுதிகளில் சட்டம் ஒழுங்கு நிலவரம்.

(iv) வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கு உடனடி நிவாரணமாக பணம் அல்லது இதர உதவிகளை அளிப்பது பற்றிய விவரம்.

(v) வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் அவரை சார்ந்தவர்களுக்கும் தேவையான உணவு பொருட்கள், உடை, தங்கும் வசதி, சட்ட உதவி பயணப்படி, தினசரிப்படி போக்குவரத்து வசதி போன்ற வசதிகளை போதிய அளவு அளித்தல்.

(vi) அரசு சாரா அமைப்புகள் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் பாதுகாப்பு கலம், பல்வேறு குழுக்கள், இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரம் உள்ள அரசு ஊழியர் ஆகியோரின் செயல்பாடு.

(vii) இச்சட்டத்தின் பகுதி IVa−இல் சொல்லப்பட்டவாறு பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் தொடர்பான அனைத்தும் நடைமுறைப்படுத்தப்படுதல்.

**10. சிறப்பு அதிகாரி நியமனம்**

மாவட்டக் குற்றவியல் நடுவர், காவல்துறை கண்காணிப்பாளர், பல்வேறு குழுக்கள், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் குழுக்கள் ஆகியோருடன் இணைந்து செயல்படுவதற்காக கூடுதல் மாவட்ட நிர்வாக நடுவர் பதவிக்கு குறையாத ஒருவரை சிறப்பு அதிகாரியாக அடையாளம் காணப்பட்ட பகுதியில் நியமனம் செய்ய வேண்டும்.

சிறப்பு அதிகாரி கீழ்கண்டவற்றுக்கு பொறுப்பேற்க வேண்டும்-

(i) வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி நிவாரணம் மற்றும் இதர வசதிகள் இந்த வன்கொடுமை மறுபடியும் நிகழாமல் இருக்க தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.

(ii) மாநில மற்றும் மத்திய அரசு சட்டங்கள் மற்றும் திட்டங்களின் மூலம் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கு பாதுகாப்பு உரிமைகள் மற்றும் இதர உதவிகள் குறித்து அவர்களுக்கு பயிற்சி பட்டறைகள் மூலம் விளக்க, அடையாளம் காணப்பட்ட பகுதி அல்லது மாவட்ட தலைமையகங்களில் விழிப்புணர்வு மையங்களை அமைத்தல்.

(iii) இந்த மையங்களை நிர்வகிப்பது அல்லது பணியரங்குகளை நடத்துவதற்காக அரசு சாரா அமைப்புகளுக்கு தேவையான நிதி மற்றும் இதர உதவிகளை அளித்தல்

(iv) இச்சட்டத்தின் பகுதி IVA இல் சொல்லப்பட்டவாறு பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகளின் உரிமைகள் அனைத்தும் அடையாளங் காணப்பட்ட பகுதிகளில் நடைமுறைப்படுத்தப்படுதல்.

**11. வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள், சாட்சிகள் மற்றும் சார்ந்திருப்பவர்களுக்கு பயணப்படி, தினசரிப்படி, பராமரிப்பு செலவு, மற்றும் போக்குவரத்து வசதிகள்:**

(1) இச்சட்டத்தின் கீழ் செய்யப்படும் குற்றத்தை விசாரிக்கும் அல்லது புலனாய்வு செய்யும் இடத்துக்கு வந்து போகும் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டோருக்கும், அவரைச் சார்ந்தவர்கள் மற்றும் சாட்சிகளுக்கும், தாங்கள் தங்கியிருக்கும் அல்லது வசிக்கும் இடத்திலிருந்து வந்துபோக அதி விரைவு வண்டி, விரைவு வண்டி, அல்லது சாதாரண தொடர் வண்டியில் இரண்டாம் வகுப்பு கட்டணம் அல்லது பேருந்துக் கட்டணம் அளிக்க வேண்டும்.

(2) புலனாய்வு அதிகாரிகள், காவல்துறை கண்காணிப்பாளர், காவல்துறை துணைக் கண்காணிப்பாளர், மாவட்ட நிர்வாக நடுவர் அல்லது பிற ஆட்சித்துறை நிர்வாக நடுவர் ஆகியோர்களை வன்முறையால் பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் சென்று பார்ப்பதற்கு தேவையான போக்குவரத்து வசதி செய்ய வேண்டும் அல்லது போக்குவரத்து செலவை அரசே ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(3) வன்கொடுமை வழக்கு குறித்து விசாரணைக்கு வரும் பெண் சாட்சிகள் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்கள் அல்லது அவரைச் சார்ந்திருப்போர் அல்லது சிறுவர்கள் 60 வயதுக்கு மேற்பட்ட முதியவர், 40 சதவீத உடல் ஊனமுற்றோர் ஆகியோர் தங்களுடன் ஒரு உதவியாளரை அழைத்துச செல்வதற்கு அனுமதிக்கப்படுவர். வன்கொடுமை குறித்த விசாரணை, புலனாய்வு ஆகியவற்றுக்குச் செல்லும் சாட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்டவர்கள் ஆகியோருக்கு அளிக்கப்படும் பயணப்படி மற்றும் பராமரிப்பு செலவு ஆகியவை உதவியாளர்களுக்கும் வழங்கப்படும்.

(4) விசாரணைக்கு வரும் பாதிக்கப்பட்டோர், அவரைச் சார்ந்தோர், உதவியாளர் அல்லது சாட்சிகள் ஆகியோர் வழக்கினால் வீட்டை விட்டு வெளியே இருக்கும் நாட்களில் அவர்களுக்கான பராமரிப்பு செலவை அளிக்க வேண்டும். மாநில வேளாண் கூலித் தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் தினசரி கூலியை அளிக்க வேண்டும்.

(5) வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களைச் சார்ந்தவர்கள், சாட்சிகள், உதவியாளர்கள் ஆகியோருக்கு தினசரி பராமரிப்பு செலவுத் தொகையுடன் உணவுக்கான தொகையையும் வழங்க வேண்டும். மாறிவரும் சூழலுக்கேற்ப மாநில அரசு மேற்கூறியவற்றுக்கான செலவை வழங்க வேண்டும்.

(6) வன்கொடுமை வழக்கு தொடர்பாக, புலனாய்வு அதிகாரிகள், அல்லது காவல் நிலைய பொறுப்பு அதிகாரி, அல்லது மருத்துவமனை நிர்வாகி அல்லது காவல்துறை கண்காணிப்பாளர், துணைக் கண்காணிப்பாளர், மாவட்ட நிர்வாக நடுவர் அல்லது பிற ஆட்சித்துறை அதிகாரிகள் ஆகியோரைச் சென்று சந்திக்கும் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களைச் சார்ந்தவர்கள், உதவியாளர்கள் மற்றும் சாட்சிகளுக்கு பயணப்படி, பராமரிப்பு செலவு, போக்குவரத்து செலவுத் தொகை ஆகியவற்றை 3 நாட்களுக்குள் திருப்பி அளிப்பதற்கான நடவடிக்கையை மாவட்ட நிர்வாக நடுவர், உட்கோட்ட நிர்வாக நடுவர் அல்லது பிற ஆட்சித்துறை நிர்வாக நடுவர் உடனடியாக மேற்கொள்ள வேண்டும்.

(7) இச்சட்டத்தின் பிரிவு 3ன் படி குற்றம் புரிந்தால் மாவட்ட நிர்வாக நடுவர் அல்லது பிற ஆட்சித்துறை நிர்வாக நடுவர், பாதிக்கப்பட்டோருக்கு மருத்துவச் செலவு, சிறப்பு மருத்துவ ஆலோசனை, ரத்தம் செலுத்துதல், அவசியமான உடைகளை மாற்றுதல், உணவு மற்றும் பழங்களை அளித்தல் ஆகியற்றுக்கான பணத்தை திருப்பிச் செலுத்த வேண்டும்.

## 12. மாவட்ட நிர்வாகம் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்

(1) வன்கொடுமை நடந்த இடத்தை மாவட்ட நிர்வாக நடுவர் மற்றும் காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோர் பார்வையிட்டு சேதம் பற்றிய விவரம், நிவாரணம் பெறத் தகுதியுள்ள குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவரைச் சார்ந்தவர்கள் பற்றிய பட்டியலைத் தயாரிக்க வேண்டும்.

(2) சம்பந்தப்பட்ட காவல்நிலையத்தில் முதல் தகவல் அறிக்கையில் வன்கொடுமை பதிவு செய்யப்பட்டுள்ளதா என்பதை காவல்துறை கண்காணிப்பாளர் உறுதி செய்ய வேண்டும். கலவரத்துக்கு காரணமானவர்களை பிடிப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(3) வன்கொடுமை நடந்த இடத்தை பார்வையிடும் காவல்துறை கண்காணிப்பாளர் உடனடியாக புலனாய்வு அதிகாரியை நியமனம் செய்ய வேண்டும். இது தவிர கலவரம் நடந்த இடத்தில் காவல்படை ஒன்றை வைப்பதோடு, அவசியமானால் இதர தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ளலாம்.

(4) வன்செயலால் பாதிக்கப்பட்டவர்கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவரைச் சார்ந்திருப்பவர்களுக்கு நிவாரண உதவியைப் பணமாகவோ அல்லது வேறுவகையாகவோ (இச்சட்டத்தின் கீழ், இதில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி) வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை மாவட்ட நிர்வாக நடுவர் அல்லது உட்கோட்ட நிர்வாக நடுவர் அல்லது பிற ஆட்சித்துறை நிர்வாக நடுவர் செய்ய வேண்டும். இந்த உடனடி நிவாரண உதவியில் உணவு, குடிநீர், உடை, தங்குமிடம், மருத்துவ வசதி, போக்குவரத்து வசதி மற்றும் மனிதர்களுக்கு தேவைப்படும் அதிதியாவசிய பொருட்கள் இடம் பெற்றிருக்க வேண்டும்.

(4A) மேற்கண்ட ட்பிரிவு **(4)**ல் சொல்லப்பட்டுள்ளவாறு நிவாரணங்களை வழங்குவதற்கு ஏற்றவகையில் உடனடியான அரசு கருவூலத்திலிருந்து தேவையான பணத்தை எடுக்க உரிய மாநில அரசோ அல்லது யூனியன் பிரதேச நிர்வாகியோ தொடர்புடைய மாவட்ட ஆட்சியருக்கு அதிகாரம் வழங்க வேண்டும்.

(4B) இச்சட்டத்தின் பிரிவு **15**a–ன் கீழ் உட்பிரிவு **6**ன் உட்பிரிவு c–ல் சொல்லப்பட்டுள்ளவாறு வன்கொடுமை வழக்குகளை விசாரிக்கும் சிறப்பு நீதிமன்றம் அல்லது தனிப்பட்ட சிறப்பு நீதிமன்றம், புலன் விசாரணைகளின் போது பாதிக்கப்பட்டவரின் சமூக பொருளாதார மறுவாழ்வுக்கு ஏற்பாடு செய்யலாம்.

(5) துணை விதி 4ல் குறிப்பிட்டபடி, வன்கொடுமைகாயல் பாதிக்கப்பட்டவர்கள், அவரைச் சார்ந்தவர்கள், இறந்தவர்கள், காயம்பட்டவர்கள், பொருட்களை இழந்தவர்கள் ஆகியோருக்கு வழங்கப்படும் நிவாரண உதவியை தவிர நடைமுறையி உள்ள சட்டத்தின் கீழ் இதர நஷ்ட ஈட்டையும் பெற அவர்களுக்கு உரிமை உண்டு.

(6) துணை விதி 4ல் குறிப்பிட்டுள்ளபடி நிவாரணம் மற்றும் மறுவாழ்வு வசதிகளை மாவட்ட நிர்வாக நடுவர் அல்லது பிற நிர்வாக நடுவர் அல்லது வேறு ஆட்சித்துறை அலுவலர்கள் அளிக்க வேண்டும். இச்சட்டத்தில் இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின் படி இந்த உதவியை அளிக்க வேண்டும்.

(7) வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு குறித்த அறிக்கையை மாவட்ட நிர்வாக நடுவர் அல்லது உட்பேட்ட நிர்வாக நடுவர் அல்லது பிற ஆட்சித்துறை குற்றவியல் நடுவர் அல்லது காவல்துறை கண்காணிப்பாளர் சிறப்பு நீதிமன்றத்திற்கு அனுப்ப வேண்டும். குறித்த நேரத்திற்குள் நிவாரண உதவி அல்லது தீருதவி பாதிக்கப்பட்டவர்களை அல்லது அவரைச் சார்ந்தவர்களை சென்று அடையவில்லை அல்லது நிவாரணத் தொகையில் ஒரு பகுதி மட்டுமே வழங்கப்பட்டது என்று நீதிமன்றத்துக்கு தெரிய வந்தால் நிவாரணத்தை முழுமையாக செலுத்துவதற்கு உத்தரவிடலாம்.

**13. வன்கொடுமை குறித்த பணியை முடிப்பதற்கு அதிகாரிகள் மற்றும் இதர பணியாளர்களை தேர்ந்தெடுத்தல்.**

(1) வன்கொடுமை நிகழ வாய்ப்புள்ள இடங்களில் நியமிக்கப்பட்ட நிர்வாக அதிகாரிகள், இதர பணியாளர்கள் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் மக்களின் பிரச்சனைகளை புரிந்துகொள்ளக்கூடிய திறமை உள்ளவராக இருக்க வேண்டுமென்பதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும்.

(2) நிர்வாகம், மற்றும் காவல்துறையின் எல்லா நிலைகளிலும் குறிப்பாக காவல் நிலையம், காவல் சாவடி ஆகியவற்றில் பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினருக்கு உரிய பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டுள்ளதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும்.

**14. மாநில அரசுக்கான குறிப்பிட்ட பொறுப்பு**

(1) அந்தந்த மாநில அரசுகள் தங்களின் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் வன்கொடுமையால் பாதிக்கப்படுபவர்களுக்கான நிவாரணம் மற்றும் மறுவாழ்வை உறுதி செய்வதற்காக தேவையான நிதியை ஒதுக்கீடு செய்ய வேண்டும். கூடுதலாக, பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் நீதியை முழுமையாகப் பெறும் பொருட்டு, சட்டத்தின் பிரிவு **15** a–ன் உட்பிரிவு **(11)** மற்றும் சட்டத்தின் பகுதி IVA இல் சொல்லப்பட்டுள்ளவாறு அவர்களின் உரிமைகளையும், அவர்களுக்கு உரியவற்றையும் பெறுவதற்கு உரிய திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

(2) வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் மற்றும் மறுவாழ்வு வசதிகளுக்காக மாநில அரசு தனது ஆண்டு வரவு செலவு திட்டத்தில் தேவையான ஒதுக்கீட்டைச் செய்ய வேண்டும். இச்சட்டத்தின் கீழ் பிரிவு **15**ன் கீழ் நியமனம் செய்யப்பட்ட சிறப்பு அரசு வழக்குரைஞரின் செயல்பாடு குறித்தும், பெறப்பட்ட பல்வேறு அறிக்கைகள் குறித்தும், மாவட்ட நிர்வாக நடுவர், உட்கோட்ட நிர்வாக நடுவர், காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோர் மேற்கொண்டபுலனாய்வு விவரம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகள் குறித்தும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட நிவாரணம் மற்றும் மறுவாழ்வு வசதிகள் குறித்தும் குறிப்பிட்ட அதிகாரிகள் மீது கூறப்பட்ட புகார்கள் குறித்தும் மாநில அரசு ஆண்டுக்கு இரண்டு முறை அதாவது ஜனவரி, ஜூலை மாதங்களில் மதிப்பாய்வு செய்ய வேண்டும்.

**15. பின்வரும் நிகழ்வு பற்றிய மாநில அரசின் திட்டம்**

(1) இச்சட்டத்தின் விதிமுறைகளை அமலாக்குவதற்கும், இதனை மாநில அரசின் அரசிதழில் வெளியிடுவதற்காகவும் மாதிரி செலவின திட்டமொன்றை மாநில அரசு தயாரிக்க வேண்டும். பல்வேறு துறைகள் மற்றும் அதன் அதிகாரிகளின் பொறுப்பு மற்றும் பங்கு குறித்தும் அரசுசாரா அமைப்புகள் கிராம/ நகர உள்ளாட்சி அமைப்புகள் ஆகியவற்றின் பங்கு மற்றும் பொறுப்பு குறித்தும் மாநில அரசு குறிப்பிட வேண்டும். இத்திட்டம் கீழ்கண்ட நிவாரண நடவடிக்கைகளை கொண்டிருக்க வேண்டும்.

(a) உடனடி நிவாரணமாக பணம் அல்லது வேறு உதவி குறித்த திட்டம் அல்லது இவை இரண்டுமோ

(aa) பாதிக்கப்பட்டவர்கள் மற்றும சாட்சிகள் நீதியை முழுமையாக பெறும் பொருட்டு, சட்டத்தின் பிரிவு 15A–இன் உட்பிரிவு **(11)**

மற்றும் சட்டத்தின் பகுதி IVA–இல் சொல்லப்பட்டுள்ளவாறு அவர்களின் உரிமைகளையும், அவர்களுக்கு உரியவற்றையும் பெறுவதற்கு உரிய திட்டம்.

(b) வேளாண் நிலம் மற்றும் குடியிருப்பு ஒதுக்கீடு

(c) மறுவாழ்வு நடவடிக்கைகள்

(d) பாதிக்கப்பட்டவரின் குடும்பத்தை சேர்ந்தவர் அல்லது அக்குடும்பத்தை சார்ந்திருப்பவர் ஒருவருக்கு அரசு அல்லது அரசின் கீழுள்ள துறைகளில் வேலை அளிப்பதற்கான திட்டம்.

(e) வன்முறையால் பாதிக்கப்பட்டட கணவனை இழந்தோர், உயிரிழந்தவர்களின் குழந்தைகள், உடல் ஊனமுற்றோர் அல்லது முதியவர்கள் ஆகியோருக்கான ஓய்வூதியத் திட்டம்.

(f) பாதிக்கப்பட்டவர்களுக்கான கட்டாய இழப்பீடு.

(g) பாதிக்கப்பட்டவர்களுக்கான சமூக பொருளாதார திட்டம்.

(h) பாதிக்கப்பட்டவர்களுக்கு செங்கல், கருங்கல்லால் கட்டப்பட்ட வீட்டு வசதியை ஏற்படுத்தித் தருதல்.

(i) பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் சுகாதாரம், அத்தியாவசிய பொருட்கள் வழங்குதல், மின்சாரம், போதிய குடிநீர் வசதி, மயானப் பாதை மற்றும் சாலை வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்தி தருதல்.

(2) எதிர்பாராத நிலைக்கான திட்டம் அல்லது அதன் சுருக்கம் குறித்த பிரதியை மாநில அரசு, மத்திய அரசின் நலவாழ்வு அமைச்சகத்துக்கும், மாவட்ட நிர்வாக நடுவர் உட்கோட்ட நிர்வாக நடுவர், காவல்துறை தலைவர், காவல்துறை கண்காணிப்பாளர் ஆகியோருக்கு அனுப்ப வேண்டும்.

**16. மாநில அளவில் கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு குழுவை அமைத்தல்.**

(1) 25 பேர் கொண்ட உயர்மட்ட அளவிலான கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு குழு ஒன்றை மாநில அரசு அமைக்க வேண்டும். கீழ்காண்பவர்கள் அக்குழுவில் இடம் பெற்றிருக்க வேண்டும்.

(i) முதல்வர், நிர்வாகி – தலைவர் (குடியரசுத் தலைவர் ஆட்சியுள்ள மாநிலங்களுக்கு ஆளுநர் தலைவராக இருப்பார்).

(ii) உள்துறை அமைச்சர் மற்றும் நலவாழ்வு அமைச்சர் உறுப்பினர்கள் (குடியரசுத் தலைவர் ஆட்சியுள்ள மாநிலங்களுக்கு ஆலோசகர்கள் உறுப்பினர்களாக இருப்பார்கள்).

(iii) பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த தேர்ந்தெடுக்கப்பட்ட நாடாளுமன்ற, சட்டமன்ற, மேலவை உறுப்பினர்களாக இருப்பார்கள்.

(iv) தலைமைச் செயலர், உள்துறைச் செயலர், காவல்துறை தலைமை இயக்குநர் பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினருக்கான தேசிய ஆணையத்தின் இயக்குநர், துணை இயக்குநர், உறுப்பினர்களாக இருப்பார்கள்.

(v) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலர் ஒருங்கிணைப்பாளராக இருப்பார்.

(2) இச்சட்டத்தின் விதிமுறைகளை நடைமுறைப்படுத்துவதையும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்பட்ட மறுவாழ்வு மற்றும் நிவாரண வசதி மற்றும் இது தொடர்பான விஷயங்கள் இச்சட்டத்தின் கீழ் நடைபெறும் வழக்குகள், விதிமுறைகள், அமலாக்க அதிகாரிகளுக்கு உள்ள பொறுப்புகள், மாநில அரசு பெறும் பல்வேறு அதிகாரிகள் குறித்த இக்கண்காணிப்புக் குழு குறைந்தபட்சம் ஆண்டுக்கு இருமுறை அதாவது ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் கூடும். குறிப்பாக, நிவாரணம், மறுவாழ்வு வசதிகள் பாதிக்கப்பட்டவர்களுக்கு சென்றடைந்ததா என்பது குறித்தும் பாதிக்கப்பட்டோர், சாட்சிகள் உரிமைகள் குறித்த அத்தியாயம் 15a உட்பிரிவு IVA–ல் குறிப்பிட்டுள்ளவாறு அனைத்து உரிமைகளும் நிறைவேற்றப்பட்டிருக்கிறதா என்றும், வழக்கு விசாரணைகள், பொறுப்புள்ள அதிகாரிகள் கடமைகளையும் பொறுப்புகளையும் நிறைவேற்றியிருக்கின்றனரா என்பது குறித்து ஆய்வு செய்யும்.

**17. மாவட்ட அளவில் கண்காணிப்பு மற்றும் விழிப்புணர்வு குழுக்களை அமைத்தல்:**

(1) மாநிலத்தின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள மாவட்ட நீதிபதி (மாவட்ட ஆட்சியர்) விழிகண் மற்றும் கண்காணிப்பு குழுக்களை அமைக்க வேண்டும். பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டத்தின் விதிமுறைகள் அமலாக்கத்தை மதிப்பாய்வு செய்யவும், வன்கொடுமையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட்ட நிவாரண மற்றும் வசதிகள் குறித்தும், இது தொடர்பான செயல்பாடுகள் குறித்தும், இச்சட்டத்தின் கீழ் விசாரணையில் உள்ள வழக்குகள் குறித்தும், இச்சட்ட விதிமுறைகளை அமல்படுத்தும் பொறுப்புள்ள பல்வேறு அதிகாரிகளின் பொறுப்புகள் குறித்தும், மாவட்ட நிர்வாகம் பெறும் அறிக்கைகள் குறித்தும் இக்குழு மதிப்பாய்வு செய்யும்.

(2) நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் மேலவை உறுப்பினர்கள் காவல்துறை கண்காணிப்பாளர், பட்டியல் சாதி மற்றும் பட்டியல் பழங்குடியின சமூகத்தைச் சார்ந்த மாநில அரசின் மூன்று 'குரூப்–A' அதிகாரிகள்/ அரசிதழில் பதிவுபெற்ற அதிகாரிகள், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினத்தைச் சேர்ந்த 5 அரசுசாரா அமைப்பைச் சேர்ந்த உறுப்பினர்கள், அரசுசாரா அமைப்புகளுடன் தொடர்புள்ள பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினத்தைச் சாராத 3 உறுப்பினர்கள் ஆகியோர் மாவட்ட அளவிலான விழிகண் மற்றும் கண்காணிப்பு குழுவில் உறுப்பினர்களாக இருக்க வேண்டும். மாவட்ட குற்றவியல் நடுவர் தலைவராகவும், மாவட்ட சமூக நல அதிகாரி உறுப்பினர் செயலராகவும் இருப்பார்கள்.

(3) மாவட்ட அளவிலான குழு குறைந்தபட்சம் 3 மாதங்களுக்கு ஒருமுறை கூடும்.

**17A. கோட்ட அளவிலான விழிகண் மற்றும் கண்காணிப்பு குழுவினை அமைத்தல்.**

(1) மாவட்டத்தில் உள்ள எல்லா கோட்டங்களிலும், அந்தந்த கோட்டாட்சியர் கோட்ட அளவிலான விழிகண் மற்றும் கண்காணிப்பு குழுவை அமைத்து இச்சட்டத்தின் நடைமுறையாக்கம் பற்றியும், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் சாட்சிகள் சட்டத்தின் பிரிவு 15A–ன் உட்பிரிவு (11) மற்றும் சட்டத்தின் பகுதி IVA–இல் சொல்லப்பட்டுள்ளவாறு அவர்களின் உரிமைகள் மற்றும அவர்களுக்கு உரியவைகள் பற்றியும் கோட்ட அளவில் ஆய்வு செய்ய வேண்டும். குறிப்பாக, நிவாரணம், மறுவாழ்வு வசதிகள் உரியவர்களுக்கு சென்றடைந்ததா என்பது பற்றியும், வன்கொடுமை வழக்கு விசாரணைகள் சரியான விதத்தில் செல்கிறதா என்றும், மற்ற பிற தொடர்புடைய அதிகாரிகள் மற்றும் அமைப்புகள் இச்சட்டம் தொடர்பான, தத்தமது கடமைகளையும், பொறுப்புகளையும் சரிவர நிறைவேற்றுகின்றனரா என்பது பற்றியும் ஆய்வு செய்ய வேண்டும்.

(2) கோட்ட அளவிலான விழிகண் மற்றும் கண்காணிப்பு குழுவில் அந்த கோட்டத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினத்தைச் சேர்ந்த சட்டமன்ற, சட்ட மேலவை உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டியல் இனத்தைச் சார்ந்த உறுப்பினர்கள், மாவட்டக் காவல்துறை துணைக் கண்காணிப்பாளர், வட்டாட்சியர் மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடி இனத்தைச்

சார்ந்த் அதிகாரப் பூர்வமில்லாத இரண்டுக்கு குறையாத உறுப்பினர்கள், பட்டியல் பழங்குடியினத்தைச் சார்ந்த அதிகாரப்பூர்வமில்லாத இரண்டுக்கு குறையாத உறுப்பினர்கள், பட்டியல் சாதிகள் மற்றும் பட்டியல் பழங்குடியினத்தைச் சாராத தன்னார்வத் தொண்டு நிறுவனங்களோடு தொடர்புடைய இரண்டுக்கு குறையாத நபர்கள் ஆகியோர் இடம் பெற்றிருப்பர்.

(3) கோட்டாட்சியர் அதன் தலைவராகவும், வட்டார வளர்ச்சி அலுவலர் அதன் செயல் உறுப்பினராகவும் இருப்பார்கள்.

(4) கோட்ட அளவிலான விழிகண் மற்றும் கண்காணிப்பு குழு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது மேற்கூறிய அலுவல் நிமித்தமாக கூடி விவாதிக்கும்.

## 18. ஆண்டு அறிக்கை

மாநில அரசு ஆண்டுதோறும் மார்ச் **31**ஆம் தேதிக்கு முன் விதிமுறைகளை அமலாக்க எடுத்துக்கொண்ட நடவடிக்கைகள், முந்தைய ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்கள் குறித்த விவரங்களை மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டும்.